அ.வ.எண் : 145/2017

தேதி : 12/03/2020

பெயர் : துரைசாமி

நேரம் : பிற்பகல் 02.15 முதல் 02.25

<u>வா.த.சா.1 குறுக்கு விசாரணை</u>

என்னுடைய பூர்வீகம் விச்சந்தாங்கள் கிராமம் ஆகும். எனக்கு படிக்க தெரியாது கையொப்பம் மட்டும் செய்வேன். இவ்வழக்கின் பிரதிவாதியை சுமார் 10 அல்லது 15 வருடங்களாக தெரியும். நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் சர்வே எண்.90/2 அதன் 4 எல்லைகள் விவரம் கிழக்கு பக்கம் ஒரு சிமெண்ட் ரோடு உள்ளது அந்த தெருவின் பெயர் பிராமணர் தெரு ஆகும். மேற்கு பக்கம் பிரதிவாதியின் நிலம். வடக்கு பக்கம் குப்பம்மாள் என்பவரின் நிலம். தெற்கு பக்கம் மகேஷ் என்பவரின் நிலம் உள்ளது. தாவா சொத்து ஆதியில் ஒரு பிராமணர் அனுபவித்து வந்தார் அவரின் பெயர் எனக்கு தெரியாது. நான் 18.12.1997 ம் தேதியில் தாவா சொத்தினை ராமதாஸ் மனைவி சுந்தரம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். தாவா சொத்தினை நான் கிரயம் பெறும் போது மூலபத்திரத்தில் உள்ள சொத்து விவரங்களை தெரிந்துக்கொண்டு தான் கிரயம் பெற்றேன். நான் தாவா சொத்தினை கிரயம் பெற்ற பின் என் பெயரில் எந்த வருடம் பட்டா பெயர் மாற்றம் செய்துக்கொண்டேன் என்றால் சரிதான் எந்த வருடம் என்று நினைவிலில்லை. நான் பட்டா மாற்றம் செய்துக்கொள்ள வருவாய் துறை அலுவலரிடம் மனு ஏதாவது கொடுத்தேனா என்றால் நான் கிராம நிர்வாக அலுவலரிடம் பட்டா வேண்டி கேட்டேன் அவர் எனக்கு பட்டா வழங்கினார் . எனக்கு பட்டா வாங்கிக்கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி பட்டாவை தான் எனது தரப்பு ஆவணம் ஏ5 ஆகும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).